## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

### வியாழக்கிழமை, 1974 எப்ரல் 25.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. அரசின் தீர்மானங்கள்.

#### (1) வினா நேரம் கைவிடப்படுதல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மேலவைத் தலைவரவர்களே, "தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 22-வது விதியின்படி கேள்வி நேரம் இன்று கைவிடப்படலாம்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 22-வது விதியின்படி கேள்வி நேரம் இன்று கைவிடப்படலாம்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

#### (2) உரிமைக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 156-வது விதியையொட்டி, 1974–75–ஆம் நிதியாண்டுக்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஒன்பது உறுப்பினர்களை, மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை: "தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 156-வது விதியையொட்டி, 1974–75–ஆம் நிதியாண்டுக்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஒன்பது உறுப்பினர்களை, மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு மூலம், விகிதாச்சார பிரதிநிதித்துவக் கொள்கைக்கிணங்க, தேர்தல்களை நடத்துவதற்காகச் செய்யப்பட்ட ஒழுங்கு முறை விதிகளின் 2 (1) ஒழுங்கு முறை விதிக்கிணங்க, 1974–75–ஆம் நிதியாண்டிற்கான அவை உரிமைக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்கு, கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலை வரையறுக்கிறேன் என்று மேலவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.